Koviloor Digital Library

பூதான யக்ஞப் பாடல்கள்

ACC NO 38740

ஆச்சாரிய விநோபா பாவே

ஸர்வோதய பிரசுராலயம், திருப்பூர்

விலை அரை அணா

Koviloor Digital Library

பூதான யக்ஞம்

ஸ்ரீ விநோபா பாவே அவர்களுடைய சாந்தி சேனையின் வழிநடைப் பாட்டு

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

1 பூமிதானம் செய்வதே புண்ணியத்திற் புண்ணியம்;
புனிதமான முறையில்நாட்டின் வறுமைபோகப் பண்ணிடும்;
சாமிசாட்சி யாகஎங்கும் சண்டைகள் குறைந்திடும்
சரிநிகர் சமானவாழ்வு சத்தியம் நிறைந்திடும் ... (பூமி)

2 ஏழையென்றும் செல்வனென்றும் ஏற்றத்தாழ்வு போய்விடும்
எங்கும்யாரும் பகைமையின்றி பங்குகொள்வ தாய்விடும்;
கோழையின்பொ றுமைதூண்டும் குற்றம்யாவும் நீங்கிடும்;
கொடுமையான பஞ்சம்விட்டு குணநலங்கள் ஓங்கிடும் (பூமி)

3 உடலுழைத்து உணவுமுற்றும் உண்டுபண்ணும் உழவர்கள்
உரிமைசொல்ல நிலமிலாமல் உள்ளம்வெந்து அழுவதா!
உடல்சுகித்து உலகினுக்கு உதவியற்ற ஒருசிலர்
ஊரிலுள்ள பூமிமுற்றும் உரிமைகொண்டு திரிவதா... (பூமி)

4 உலகிலுள்ள நிலமனைத்தும் உலகநாதன் உடைமையே;
ஊரிலுள்ள விளைநிலங்கள் ஊர்ப்பொதுவாம் கடமையே
கலகமின்றி சட்டதிட்டக் கட்டுப்பாடும் இன்றியே
கவலையற்ற சமரசத்தின் காட்சிகாண நன்றிதே ...(பூமி)

5 காந்திதர்ம நெறியைக்காக்க கடவுளிட்ட கட்டளை
கருணையோடு பூமிதானம் செய்யக்கோரும் திட்டமே;
ஆய்ந்துபார்க்கின் உலகிலெங்கும் அமைதியற்ற காரணம்
அவரவர்க்கு நிலமிலாத ஆத்திரத்தின் பேரில்தான் ... (பூமி)

6 தானதர்ம ஆசையேநம் தமிழகத்தின் கல்வியாம்
தந்தவர்க்கும் இன்பமேநம் தலைசிறந்த செல்வமாம்
ஏனருக்குப் பூமிகொஞ்சம் தானமாகத் தருவதால்
தேசமெங்கும் அமைதிபெற்றுத் திருவிலாசம் பெருகுமே (பூ)

7 கும்பிவேகும் பசிமிகுந்தக் கோபதாபம் என்னவே
கொடுமைசேர் புரட்சிவந்து கொள்ளைபோகு முன்னமே

Koviloor Digital Library

38740

அன்பினோடு பூமிதானம் ஆனமட்டும் செய்வதே
அச்சமின்றி நாட்டிலெங்கும் அமைதிபெற்று உய்வதாம்(பூ)

8 விளைவுமுற்றும் சொந்தமாகும் விளைநிலங்கள் தந்திடில்
வேலையற்ற கோடிமக்கள் விளைச்சல்செய்ய முந்துவார்
களைவிழுந்து தரிசுபட்ட கோடிகோடி காணிகள்
களிசிறக்கச் செழுமைபெற்றுக் கதிர்கள்
முற்றக் காணலாம் (பூ)

9 காந்திசொன்ன ராமராஜ்யம் காணவல்ல தலைவனாய்
கர்ம, பக்தி, ஞானயோகம் கருதும்புத்தி நிலையனாய்
சாந்தசக்தி யாக்ருகத்தின் சாட்சியாம் விநோபா
சாற்றுகின்ற பூமிதானம் சோற்றுப்பஞ்சம் மாற்றுமே(பூ)

10 விரதமாகக் காந்தியண்ணல் விட்டுப்போன வேலையை
விட்டிடாமல் கட்டிக்காக்கும் விறுகொண்ட சீலனால்
பரதநாட்டின் தர்மசக்தி பாரிலெங்கும் சூழவே
பகையில்லாமல் யுத்தமென்ற பயமிலாமல் வாழலாம் (பூ)

11 தெய்வஜோதி காந்தியண்ணல் தேர்ந்தெடுத்த சீடனும்
திருவினோப பாவேநமது தேசநன்மை நாடினார்
வையமெங்கும் பெருமைபெற்ற வண்மைமிக்க தமிழகம்
வந்துபூமி தானம்வாங்க வரவுசொல்லி வாழ்த்துவோம் (பூ)

12 கருணைவாழ்வின் அருணனான காந்திசீடன் வருகிறார்
கால்நடந்து ஊர்கள்தோறும் கைகுவிக்கப் பெறுகிறார்
தருணமீது தமிழகத்தின் தனிமையாகும் வண்மையைத்
தாங்கிப்பூமி தானமீந்து தர்மவேள்வி பண்ணுவோம் (பூமி)

வாழி

வாழ்கவாழ்க காந்திநாமம் என்றும் நின்று வாழவே
வந்துதித்த நம்விநோப வாய்மையாளன் வாழ்கவே
வாழ்க பூமி தானம்செய்யும் வண்மைபோற்றும் யாவரும்
வாழ்கசாந்த சத்தியத்தில் வந்தநம் சுதந்திரம்.

குறிப்பு:- இந்தப் பாடலை "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற மெட்டில் பாடுக

Koviloor Digital Library

எல்லோரும் உய்வோம்

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

1. பாட்டாளி மக்களின் பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்
குற்றேவல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டு
வேறுளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிப்போக உரிமை
நடவாது இனியென்று நாமறிதல் பெருமை —பாட்

2. உடலத்தின் வடிவத்தில் பேதங்கள் உண்டு
உள்ளத்தின் எண்ணத்தில் வித்யாசம் உண்டு
சடலத்தை ஆள்கின்ற பசிதாகம் என்றால்
சகலர்க்கும் உலகத்தில் பொதுவான தன்றோ
கடலொத்த தொழிலாளர் வெகுபாடு பட்டும்
கஞ்சிக்கும் வழியின்றிக் கண்ணீரைக் கொட்டும்
மடமிக்க நிலைமைக்கு மாற்றில்லை யானால்
மனிதர்க்குள் அறிவுள்ள ஏற்றங்கள் ஏனோ? —பாட்

3. பசைமிக்க தொழில்செய்தும் பலன்முற்றும் யாரோ
பரிவற்ற சிலபேர்கள் பறிகொண்டு போக
பசிமிக்கு சினமுற்று தொழிலாளர் எல்லாம்
பகைஎன்று நமைஎண்ணிப் பழிகொள்ளு முன்னால்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்
வறுமைக்கு இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க பூதானம் இதுகொண்டு செய்தால்
எல்லோரும் பசியற்று மகிழ்வெய்தி உய்வோம் —பாட்

4. நிலமின்றி பலபேர்கள் தொழிலின்றி வாட
நிறைகின்ற கல்லோடு முள்ளோடு கூட
நலமொன்றும் பயவாமல் தரிசான பூமி
காடெங்கும் ஊர்தோறும் நாம்காண லாமே
இலையென்ற ஏழைக்கு இதுசொந்த மானால்
எரிகின்ற மனம்மாறிக் களிகொள்ளு வானே
பலர்எங்கும் பரிவோடு பயிர்செய்யும் போது
பஞ்சங்கள் வருமென்ற பாபங்கள் ஏனோ? —பாட்

Koviloor Digital Library

எது வேண்டும்?

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

1 எது உனக்கு வேண்டுமென்று
எண்ணிப் பார்த்துச் சொல்லடா
மதிமிகுந்த மனித ஜென்ம
மகிமைகாத்து நில்லடா (எ)

2 ஞானமுள்ள நாடிதென்ற
பேர்நிலைத்தல் வேண்டுமா?
சேனைகொண்டு சென்றுகொன்று
சீர்குலைத்தல் வேண்டுமா? (எ)

3 தந்திரத்தை வெல்லும் தூய்மை
தாங்கி நிற்க வேண்டுமா?
எந்திரத்தின் அடிமையாகி
ஏங்கிநிற்க வேண்டுமா? (எ)

4 அறிவுகொண்டு மக்களுக்கு
அன்பு செய்தல் வேண்டுமா?
செறிவுகொண்ட சக்திபெற்று
சேதம் செய்தல் வேண்டுமா? (எ)

5 வெள்ளையாகத் தீமையை
எதிர்த்து வெல்ல வேண்டுமா?
கள்ளமாய் மறைந்து செல்லும்
காரியங்கள் வேண்டுமா? (எ)

6 அன்பு சொல்லித் தீமையை
அடக்கியாள வேண்டுமா?
வம்புபேசித் தீமையை
வளர்த்துவைக்க வேண்டுமா? (எ)

7 சத்தியத்தின் பற்றுகொண்ட
சாந்தவாழ்வு வேண்டுமா?
மற்றசெய்து மனிதமேன்மை
மாய்ந்துபோக வேண்டுமா? (எ)

8 தீரமாகப் பொறுமை காட்டும்
திறமடுக்க வேண்டுமா?
வீரமென்று கோபமூட்டும்
வெறிபிடிக்க வேண்டுமா? (எ)

Koviloor Digital Library

9 ஆசையற்ற சேவைசெய்யும்
நேசவேலை வேண்டுமா?
தேசபக்தி மாசுகொள்ளும்
நாசவேலை வேண்டுமா? (எ)
10 தெய்வம் உண்டு என்று நம்பும்
தேசபக்தி வேண்டுமா?
பொய்யும் போரும் புனிதமென்று
பேசும் புத்தி வேண்டுமா! (எ)
11 வலியச்சென்று தானம் செய்து
வாழ்த்துகொள்ள வேண்டுமா?
வலிமை வந்து நம்மைத் தாக்கி
வீழ்த்திக்கொள்ள வேண்டுமா! (எ)

யார் தொண்டன்?

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

1 தொண்டு செய்யக் கற்றவன்
துயரம் போக்கும் உற்றவன்
சண்டை போடும் மக்களை
சரசமாக்கி வைக்கவே.
2 நீரவாழ்வு சொல்லுவான்
நிமையாவும் வெல்லுவான்
ஈரமற்ற செய்கைகள்
வீரமென்றல் பொய்யென (தொண்டு)
3 சேவைசெய்யும் நல்லவன்
செம்மைகண்ட வல்லவன்
தேவையுள்ள யாரையும்
தேடிச்சென்று சேருவான் (தொண்டு
4 அன்பினைப் பெருக்குவான்
ஆசையைச் சுருக்குவான்
துன்பமுற்ற எவரோடும்
துணையிருக்கத் தவறிடான் (தொண்டு)
5 பணிவறிந்த தொண்டனே
பரமஞானம் கண்டவன்
தண்டமிக்க சொல்லினால்
தாரணியெங்கும் வெல்லுவான் (தொண்டு)
6 கூவிடாமல் ஓடுவான்
குறைகள் தீர்க்க நாடுவான்

Koviloor Digital Library

எவிடாத தொண்டனே
எதிலும் வெற்றி கொண்டவன் (தொண்டு)
7 கடவுளென்ற சக்தியை
கருதிடாத பித்தரின்
மடமை நீக்கும் சேவைதான்
மனிதர்க்கின்று தேவையாம் (தொண்டு)
8 பூமிதான போதகன்
பூஜிதன் விநோபா
புதுமைமிக்க தொண்டுதான்
போற்றவேண்டும் இன்றுநாம் (தொண்டு)

38740.

கேளுங்கள்!

கு. பழனிவேல்

பல்லவி

கேளுங்கள்! கேளுங்கள்!! பூமிதேவி சொல்வதை

அநுபல்லவி

நீள்புவியில் யாவரும்—தம் நேய மைந்தர் என்கிறாள் –கே

சரணம்

என்மகன் ஒருவன் மிக்க இன்பமாக வாழ்ந்திட
இன்னொருவன் வறுமை மிஞ்சி இடர்புகுந்து வீழ்வதா?
உன்னைப்போல அவனுமென் உற்றமைந்தன் அல்லவோ?
தன்னைப்போல வாழவே தான்நினைப்பீர் என்கிறாள் –கே

அவன் நிலத்தைக் கொண்டு நீ அநுபவித்தல் நீதியோ?
அவனை வஞ்சித் தென்னிடம் அன்புகொள்ளல் நீதியோ?
அவனும் நீண்ட காலமாய் அநாதையாக வாழ்வதோ?
அன்னைநான் பொறுத்திடேன் அரைநொடியும் என்கிறாள் –கே

என்புதல்வர் துன்பம் கேட்டு இதயம்பற்றி வேகுதே;
இரவிலும் பகலிலும் அவரழுகை கேட்குதே;
அன்பிழந்து பித்தர் போல அவரலைதல் நீதியோ?
என் பிரிய மைந்தர்காள், இரங்கிடுவீர் என்கிறாள் –கே

Koviloor Digital Library

4. மேதினியில் பாவே என்ற மெய்ப் புதல்வன் வருகிறான்
விண்ணோர்மெச்ச பூமிதான வேள்வி செய்து வருகிறான்;
நீதி, அன்பு, அமைதி எங்கும் நிலைநிறுத்த வருகிறான்;
நீங்கிடாத அன்புகொண்டு நீடுவாழ்வீர் என்கிறான் -கே

5. ஜாதிகள் மதங்கள் என்ற சண்டை போக்க வருகிறான்
தனியுடைமை யாவும் மக்கள் சமவுடைமை என்கிறான்;
ஜோதி என்ற அன்பமைதி தொல்லுலகில் பரப்பிடத்
தொண்டு செய்து வருகிறான் விநோபா வென்று
சொல்கிறான் —கே

6. கோடி கோடி செல்வங்கள் குவித்துவைத்த மாந்தர்காள்
கொஞ்சம் உங்கள் தம்பிக்குக் கொடுத்திடுவீர் அன்னை நான்
நாடிவந்தே சொல்கிறேன் நல்மனசு பண்ணி இந்
நாளில் பூமிதானம் நீர் நல்கிடுவீர் என்கிறாள் —கே

7. பூமியென்ற தாயெனக்குப் புத்திரர்கள் செய்கடன்
பூமிதானம் ஒன்றல்லாது பூவுலகில் வேறில்லை
ஆமாம் இன்றே வாருங்கள், அன்னைஎன்சொற் கேளுங்கள்
சேமமாக வாழுங்கள், சேயரொன்றாய் என்கிறாள் —கே

ஸர்வோதய பத்திரிகையும் இலக்கியமும்

காந்திய ஸர்வோதய
தத்துவத்திற்கும்
விநோபாஜியின்
பூதான யக்ஞத்திற்கும்
"ஸர்வோதயம்"
மாதப் பத்திரிகையைப்
படியுங்கள்

வருஷ சந்தா ரூ. 3

காந்திய இலக்கியம்
மகாத்மா எழுதியது

ஆசிரம வாழ்க்கை	1—4
ராட்டை-தத்துவ விளக்கம்	1—4
நீதி தர்மம்	1—4
ராமநாமம்	0-12
ஸர்வோதயம்	0—5

தபால் செலவு தனி

முழு இலக்கிய விபரத்திற்கு எழுதவும்

ஸர்வோதய பிரசுராலயம், திருப்பூர்

சக்தி பவர் பிரஸ், திருப்பூர்.

Koviloor Digital Library